

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## பரிசுத்தவான்களின் அளவற்ற மகிழ்ச்சி !

தெய்வ பயத்துடன் 'நாள்தோறும்' தேவனுடைய சமூகத்தில் நின்று தங்களை சுத்திகரித்து வாழும் பரிசுத்தவான்கள் அடைந்திடும் மிகச்சிறந்த பாக்கியம் "கர்த்தரே அவர்களின் சுதந்திரமாய்" மாறுவதுதான்! (சங்.16:5). இந்த சுதந்திரமே அல்லது இந்த சம்பத்தே 'நேர்த்தியானது' என்றும்! 'சிறப்பானது' என்றும் பக்தர்கள் கொண்டாடுவர்! என அடுத்த வசனம் கூறுகிறது (வசனம்.6).

அதுபோலவே தேவனும், இந்த பரிசுத்தவான்களை "தம்முடைய பரிசுத்தவான்கள்!" என்றே கர்த்தர் சுதந்தரித்துக்கொள்கிறார் என 10-ம் வசனம் கூறி மகிழ்கிறது! எனவேதான், "தமது சம்பத்தாகிய அவரது சுதந்திரத்தை" தேவனே பத்திரமாய் காப்பாற்றுவார் என்றும்.... அவரது பரிசுத்தவான்களை, தொடர்ந்து 'கறைபடாது' பரிசுத்தத்திலும் காப்பார் என்று கூறும் சத்தியமே, இந்த பரிசுத்தவான்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியாயிருக்கிறது! என, சங்கீதம்.16:5,10 வசனங்கள் கெம்பீரிக்கிறது!

*-tr*

பெட்டகம் 20 | ஏப்ரல் 2018 | பரல்கள் 4



## "பிதாவின் நாம" மகிமையை முடிவுவரை காத்துக்கொண்டவர்கள்!

"நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல், ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த 1,44,000 பேரையும் நிற்கக் கண்டேன்" என வெளி.14:1-ம் வசனம் தொனிக்கும் கெம்பீரத்தைப் பாருங்கள்! தங்கள் நெற்றியில் தாங்கிய 'பிதாவின் நாமத்திற்கு' களங்கமோ அபகீர்த்தியோ ஏற்படாமல், விசுவாசத்தில் இறுதிவரை நிலைநின்ற உத்தம சீஷர்கள்! இதற்கு மாறாக, தங்கள் ஆரம்ப கிறிஸ்தவ விசுவாச ஜீவியத்தின் மலை அடிவாரத்திற்கு வந்து, பின்பு, மலையில் சிறிது தூரம் ஏறி..... பின் வாங்கியவர்களே, திரளான ஜனங்களாய் இருக்கிறார்கள்! ஆம், கால சக்கரத்தின் பல்வேறு சோதனை, பாடுகளில், தங்கள் சிலுவை எடுத்து, அந்த சிகரத்தின் மேல் "ஆட்டுக்குட்டியானவரோடு" நின்றவர்களோ வெகு சிலராய் போய்விட்டார்கள்!!

பந்தய சாலையில் ஏராளமான பேர் ஓடி வந்தார்கள், ஆனால் **'சிலரே' பந்தயப் பொருளை பெற்றார்கள்.** நீங்களோ, கடைசிவரை ஜெயமாய் "பெற்றுக்கொள்ளும்படி" ஓடுங்கள்! என்ற பவுலின் புத்திமதிக்கு செவிகொடுத்தவர்கள் இன்று வெகுசிலரே! (1கொரிந்தியர்.9:24). "கடைசிநாட்களில்..... மனுஷர்கள் (விசுவாசிகள்) தற்பிரியராயும், பணப்பிரியராயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்..... தேவபக்திக்கு பெலன் அல்லது வல்லமை உண்டு என்பதை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" என 2தீமோத்தேயு.3:1 முதல் 6 வரை கூறப்பட்ட வசனங்கள், 2018- வருடங்களாய் தொடர்ந்து இன்றுவரை வாழும் நமக்கே எச்சரிக்கையாக கூறப்பட்டுள்ளது!

*-Ed*

### முக்கிய அறிவிப்பு

**2018 'பரலோக பொக்கிஷங்கள்'** வருட சந்தா ரூ.**140**/- M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி! புதுப்பிக்காதவர்கள் **மே 15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120**/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.**800**/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக்கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## துன்பத்தின் பாதையில் மலர்ந்திடும் ஊழியம்!

*பவுல் தன்னுடைய ஊழியத்தை எவ்வாறு பெற்றார்? என்பதை 2கொரிந்தியர் நேர்த்தியாய் எடுத்துக்கூறுகிறது! தேவன் அவரை பரிசுத்தாவியினால் அபிஷேகித்தார் என்பது மாத்திரமே ஊழியத்தகுதியல்ல! 'பரிசுத்தாவியின் அபிஷேகத்தை* (Anointing)*' பெற்ற அநேகர் தங்களுக்குள்ளிருந்து புரண்டோடும்* **ஜீவநதியின் ஊழியத்தையோ** *இன்னமும் பெறவில்லை! ஏனெனில், அவர்கள் 2கொரிந்தியரை சரியாய் வாசித்து விளங்கிக் கொள்ளவில்லை. மாறாக, பரிசுத்தாவியின் அபிஷேகத்தை மாத்திரமே விளங்கிக் கொண்டு, அதுவே எல்லாவற்றிற்கும் போதுமானது என எண்ணி விட்டார்கள்! ஆம், தேவன் அவர்களுடைய உள்ளான ஜீவியத்தில்* **நொறுங்குதலை ஏற்படுத்தும் கிரியைகளுக்கு தங்களை** *ஒப்புக்கொடுக்க வில்லை! 'அடிக்கப்பட்ட பாறையிலிருந்துதான்' நதியின் தண்ணீர் பிரவாகம் புரண்டோடியது (யாத்.17:6, சங்.105:41).*

*2கொரிந்தியர்.1:3,4 வசனங்களில், பவுல் தன்னுடைய ஊழியத்தை எவ்வாறு பெற்றார் என்பதை சுருக்கமாய் காண்கிறோம். அதற்கு அவர் பயன்படுத்தும் வார்த்தை "***ஆறுதல்***" என்பதேயாகும். இந்த வார்த்தைக்கு உள்ள மூலஅர்த்தம் "***பெலன்***" என்பதேயாகும். அவ்வாறாகவே '*Fort*' என்ற பதத்தி லிருந்து இந்த வார்த்தை தோன்றுகிறது. எனவே, இந்த வசனங் களை கீழ்கண்டவாறு நாம் வாசிக்கலாம்: "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவித 'பெலத்திற்கும்' தேவனாய் இருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்! எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிற* **மற்றவர்களை நாங்கள் பெலப்படுத்த திராணியுள்ளவர்களாகும்படி** *எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு பெலனைத் தருகிறார்" என்றே வாசிக்க வேண்டும்.*

*பல்வேறு விதமான உபத்திரவங்களையும் துன்பங்களையும் சந்திக்கிற ஜனங்களால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். அவர்கள் ஜெயித்து வாழ, நாம் உதவி செய்ய வேண்டுமென்றால், நாம் முதலாவது அநேக உபத்திரவங்களிலும் துன்பங்களிலும் பிரவேசித்து, அவை எல்லாவற்றிலும் ஜெயம் பெற்றிருக்க*

*வேண்டும்! தேவன் நமக்கு அருளிய சூழ்நிலைகளை மேற்கொண்டு, அவர் மூலம் பெற்ற பெலனையும், உற்சாகத்தையும், ஜெயத்தையுமே நாம் மற்றவர்களுக்கு வழங்கிட முடியும்! இதுவே, புதிய உடன்படிக்கையின் ஊழியமாகும்!*

**கிறிஸ்தவ புத்தகங்களைப் படித்து, கேசட் செய்திகளைக் கேட்டு, அதன் மூலம் பிரசங்கங்களை தயார் செய்வதால் புதிய உடன்படிக்கை ஊழியம் மலருவதில்லை! ஒருபோதும் இல்லை. மாறாக, ஒருவன் அந்தரங்கத்தில் ஏராளமான பாடுகளுக்குள் பிரவேசிக்கவேண்டும்!**

*இயேசு நம்மைப் போலவே எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டு, நம் எல்லோருக்கும் "முன்னோடியாய்" மாறினார்! இவ்வாறு, ஒவ்வொரு சோதனையையும் சந்தித்து மேற்கொண்டபடியால், நம்மைப் பார்த்து "என்னை பின்பற்றுங்கள்" என கூற முடிந்தது. இப்போது நாம், நம்மை சூழ்ந்திருக்கும் மற்றவர்களுக்கு 'குட்டி-முன்னோடிகளாய்' மாறி, அவர்களைப் பார்த்து "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்களும் என்னை பின்பற்றுங்கள்" என அழைத்திட வேண்டும்! (1கொரி11:1).*

*பவுல் என்னதான் பரிசுத்தாவியின் அனைத்து வரங்களையும் பெற்றிருந்தாலும், அவருடைய ஜீவியத்தில் ஏராளமான உபத்திரவங்களிலும் துன்பங்களிலும் பிரவேசிக்காவிட்டால் 'ஒரு ஊழியத்தை' அவரால் பெற்றிருக்கவே முடியாது! அநேகர் "வேத ஆராய்ச்சி போதாது! பரிசுத்தாவியின் அபிஷேகமும்* (Anointing)! *நமக்கு வேண்டும்" என கூறுகிறார்கள். ஆனால் நானோ "இந்த இரண்டுமே கூட போதாது! நாம் இன்னமும் அநேக உபத்திரவங்களின் வழியாய் பிரவேசித்து, தேவனுடைய உதவியைக் கொண்டு அவை எல்லாவற்றிலும் ஜெயித்து வாழ வேண்டும்!" என்றே கூறுகிறேன்! இவ்வாறாகவே நாம், புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் மாறுகிறோம்! நாம் தேவனுடைய வார்த்தையை பல மணிநேரங்கள் செலவழித்து ஆராய்ந்து, அதன் மூலமாய் 'தேவனுடைய மனதை' அறிய வேண்டியது அவசியமேயாகும். அதுபோலவே, ஜெபத்தில் ஊக்கமாய் தேவனைத்தேடி, பரிசுத்தாவியின் வரத்தையும் பெற்றிட வேண்டியதும் அவசியமேயாகும்!* **அதன்பிறகு, தேவன் நம்மை 'உபத்திரவத்தின் கல்வி பாதைக்குள்' நடத்தவேண்டியதாய் இருக்கிறது.** *அப்போது மாத்திரமே, ஒரு வலிமையான ஊழியத்தை தேவன் நமக்கு தந்திட முடியும்! "கிறிஸ்துவினுடைய பாடுகள், கிறிஸ்துவினாலே எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு* **பெலனும் பெருகுகிறது**"*(1:5) என பவுல் கூறினார்.*

*இவ்வாறாகவே, பிறருக்கு உதவி செய்யப் போதுமான பெலனுடையவர்களாய், நாங்கள் எவ்வாறு மாறினோம்? என்பதை பவுல் கூறியுள்ளார். இதுபோன்ற தகுதிக்கு 'நாம் பெற்றோர்களாலும் உறவினர்களாலும்' புறக்கணிக்கப்பட வேண்டியது அவசியமாய் இருக்கலாம்! மற்றவர்களால் அசட்டை செய்யப்படலாம்! பொருளாதார கடினப் பாதைக்குள் செல்ல வேண்டியதாயிருக்கலாம்! வியாதியின் அனுபவங்களைக்கூட நாம் கடந்து வர வேண்டிய தாயிருக்கும்!*

*சரீர ஆரோக்கியம், தேவன் நமக்கு அருளிய மிகவும் பயனுள்ள ஓர் வரமேயாகும்! ஆனால் 'அதுவே' தேவனை நாம் வலிமையாய் சேவிப்பதற்கு போதுமானதல்ல. தன்னிடமிருந்த ஒரு சுகவீனத்தை "மாம்சத்திலுள்ள ஒரு முள்" என்றே பவுல் அழைத்தார். அதை தேவன் அகற்றியிருக்க முடியும்..... ஆகிலும், அப்படி அவர் செய்யவில்லை. தீமோத்தேயுவுக்கு ஏற்பட்ட 'முள்' அடிக்கடி அவனுக்கு நேரிட்ட வயிற்று பெலவீனமேயாகும். பவுல் அவனுக்காக ஜெபித்த பின்புகூட தேவன் தீமோத்தேயுவை சுகமாக்கவில்லை! (1தீமோ.5:2). தனக்கு நேரிட்ட பெலவீனத்திற்காக, ஜீவகாலமெல்லாம் கொஞ்சம் மருந்து எடுக்கவேண்டியது தீமோத்தேயுவுக்கு அவசியமாயிருந்தது!*

***பவுலும் தீமோத்தேயுவும், புதிய ஏற்பாட்டில் நாம் காணும் வலிமையான தேவ ஊழியர்கள்! அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட சரீர பெலவீனம், அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்திட தடைசெய்ய முடியவில்லை! அதுமாத்திரமல்ல, அவர்கள் இன்னமும் சிறப்பான முறையில் ஊழியம் செய்திடவே வைத்தது!***

*அவர்களின் 'முட்களை' தேவன் பயன்படுத்தி, அவர்களை தாழ்மையில் வைத்திருந்தார். அதன் மூலமாய், "தேவனுடைய எல்லாவற்றிற்கும் போதுமான கிருபை" அவர்களை சூழ்ந்து கொண்டது! ஏனெனில் தாழ்மையுள்ளவர்களுக்கு மாத்திரமே தேவன் கிருபையைத் தருகிறார் (2கொரிந்தியர்.12:7; 1பேதுரு.5:5).*

***ஆகவே நமக்கு ஆரோக்கியமோ? அல்லது வியாதியோ? ஆகியவற்றில், எது நமக்குச் சிறந்ததென்ற தீர்மானத்தை தேவனிடத்தில் விட்டு விடுவதே நலம்!***

*இன்று அநேக பிரசங்கிகள், தேவனுடைய ஊழியத்திற்கு ஏராளமான பணம் தேவைப்படும் என்ற தோற்றத்தை ஜனங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவ்வித தோற்றம் முற்றிலும் தவறானது! பவுல், அநேக சமயங்களில் வெகு கொஞ்ச பணமே*

*வைத்திருந்தார். சில சமயங்களில் உணவு வாங்குவதற்கும், குளிருக்கு உடுத்தும் உடை வாங்குவதற்கும் கூட போதுமான பணம் இல்லாதவராய் இருந்திருக்கிறார் (2கொரி.11:27). இந்த உலகத்தில் உள்ள கம்பெனிகள் கூட, தங்கள் வேலையாட்களுக்கு அவர்களின் தேவைக்கு மேலாகவே கொடுத்திருக்க, தன்னுடைய மிகச் சிறந்த ஊழியர்கள், உணவும் குளிருக்கு போர்த்தும் ஆடைகளும் இல்லாதிருக்க தேவன் ஏன் அனுமதித்தார்? ஏனென்றால், எல்லோரைக் காட்டிலும் முதலாவதாக பவுல் "எந்த சூழ்நிலைகளிலும் திருப்தியாய்! நன்றியுடன்! இருந்திட" கற்றுக்கொள்ளும்படியே அவ்வாறு செய்தார். மேலும், இந்த உலகத்திலுள்ள 'மற்ற ஜனங்கள்' உணவும், குளிருக்கு கம்பளி ஆடை இல்லாதிருக்கும்போது எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? என்பதை பவுல் அனுபவமாய் அறிந்து கொள்ளவும் தேவன் விரும்பினார்.*

**நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்றால், மற்றவர்கள் அடைந்திடும் துன்பங்களை நாமும் அனுபவித்திட வேண்டும்!**

*என்னுடைய திருமண வாழ்வின் ஆரம்ப வருடங்களில் பொருளாதார நெருக்கடியில் சில வருடங்களாய் வாழ்ந்தோம். ஆனால் அதுவே நாங்கள் தேவனை முழுவதுமாய் நம்பி வாழ்ந்த, ஆசீர்வதிக்கப்பட்ட வருடங்களாய் இருந்தது! அந்த வருடங்களில், எளிமையாய் வாழ்வதற்கும்! எங்கள் பொருளாதார எல்லையின்படி வாழ்வதற்கும்! ஒருவரிடமும் கடன் வாங்காதிருப்பதற்கும்! நாங்கள் கற்றுக் கொண்டோம்! நாங்கள் தேவனிடத்தில் நெருங்கிச் சென்றோம்! கணவன், மனைவி என்ற ஐக்கியத்திலும் கிட்டிச் சேர்ந்தோம்! அன்று எளிய ஜீவியத்தில் நாங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள், இன்றும் 47- ஆண்டுகளாய் எங்களிடம் நிலைத்திருக்கிறது. அந்த வருடங்களுக்காய் என் மனைவியும் நானும் மிகுந்த நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்!* **பொருளாதார நெருக்கடிகள் எங்கள் ஆவிக்குரிய கல்விக்கு பிரதான பாடமாய் மாறியது.** *அதேவிதமாய், புறக்கணிப்படுவதும், பொய்யான குற்றம் சாட்டப்படுதலும் ஆகிய அனைத்தும் 'எங்களை பெலப்படுத்துவதற்காகவே' தேவன் பயன்படுத்தினார்.*

**இதுபோன்ற நெருக்கங்களில் நாங்கள் கடந்து வந்திருக்காவிட்டால், இத்தனை வல்லமையான ஊழியத்தை நாங்கள் பெற்றிருக்கமாட்டோம். ஆகவே ஒரு கஷ்டமும் இல்லாத வாழ்க்கை வாழ்பவர்களைக் கண்டு ஒருபோதும் பொறாமைபடாதீர்கள். அவர்களை ஏறிட்டுப் பாருங்கள், அவர்களிடம் செல்வமான ஊழியம் ஏதுமில்லை!**

*பவுல் தொடர்ந்து கூறுகையில் "சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று" (2கொரி.1:8) எனகூறினார். இவ்வாறு ஏராளமான துன்பங்களின் வழியாகச் சென்ற பவுல் 'மரணம் நேரிடுமோ?' என்று எண்ணவேண்டிய நிலையிலும் இருந்தார். இவ்வாறு, பவுல் தான் கடந்து சென்ற துன்பங்களை எழுதியது நன்மையாகவே இருக்கிறது!*

**பவுலின் ஊழியம் வெறும் வேத அறிவினாலும், பரிசுத்த ஆவி அபிஷேகத்தின் மூலமாக மாத்திரமே உண்டானது என, நம்மில் ஒருவரும் எண்ணாதபடி, தன்னுடைய துன்பத்தின் பாதையை சிறிதளவு நம்மிடம் பகிர்ந்து கொண்டார்!**

*பவுல் ஏராளமான துன்பங்களை தன் ஊழியத்தில் கடந்து சென்றார்! ஆகிலும், 11- ம் அதிகாரத்தில் பவுல் குறிப்பிட்டதெல்லாம் 'குறைந்த அளவே' ஆகும்! நாம் விழிப்படையக்கடவோமாக!*

*– சகரியா பூணன்*

---

## நான் பெற்ற கிருபை, பிறருக்கும் பாய்ந்து செல்ல கண்டேன்!

*இந்நாட்களில், கன்னியாஸ்திரீகளின் தலைமைக்கு நற்பெயர் பெற்ற ஒரு மூத்த சகோதரியை நான் காண நேரிட்டது. என்னோடு அவர்கள் பழகிய கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, அவர்கள் ஆசிரமத்திற்கு திரும்ப வேண்டிய நேரத்தில், என்னைப் பார்த்து "உங்கள் பேச்சிலும் பழக்கவழக்கத்திலும் உள்ள* **தெய்வீகம்** *என் உள்ளத்தை கவர்ந்தது" என கூறிச் சென்றார். அப்போது நான் சிந்திக்கத் தொடங்கி "உள்ளான ஆத்துமாவின் அழகை, வெளித்தோற்றத்திலும் தேவன் பரிமளிக்கச் செய்கிறார்!" என்ற உண்மையை விளங்கிக்கொண்டேன். சில வாரங்கள் கழித்து, என் கணவரின் உறவினரான முதிர்வயதுகொண்ட ஒரு சீமான், என் கணவருடைய வயதான அத்தையிடம் "உன் மருமகள் குயானிடம் நான் கண்ட வெகு ஆச்சரியமான காரியம் ஒன்று சொல்ல வேண்டும்..... அவள்* **தேவனுடைய சமூகத்தை விட்டு நீங்காமல்** *வாழ்வதைக் காண்கிறேன்!" என கூறிச் சென்றார்.*

**நான் ஆச்சரியப்பட்டது என்னவென்றால், அறிமுகமில்லாத ஒரு உறவினர் 'என்னிடம் தேவன் இருப்பதையும், அவரது சமூகம் என்னை சூழ்ந்து இருப்பதையும்' காண முடிந்ததைக் கண்டு வியந்தேன்! என்னை ஆசீர்வதித்த தேவ சமூகம், பிறரையும் ஆசீர்வதிப்பது மகிழ்ச்சி அல்லவா?**

இந்த கன்னியாஸ்திரீ தலைவி, என் அரண்மனைக்கு வந்து தேவனுடைய உணர்வை பெற்றுச் சென்றபடியால், மீண்டும் என்னை காண வந்தார்கள். என் கணவர் அடிக்கடி சுகவீனமாவதையும், நான் அவருக்கு கூடவே இருந்து பணிவிடை செய்வதையும் அந்த கன்னியாஸ்திரீ தலைவி அறிந்திருந்தார்கள். ஆகவே, அவர்கள் என்னைப் பார்த்து, மடத்தில் உள்ளவர்களுக்காக அமைந்திருக்கும் 'பொழுதுபோக்கு அரங்கிற்கு' என்னை அழைத்தார்கள். நானோ அதற்கு மறுத்துவிட்டேன். பொழுதுபோக்கு ஸ்தலத்திற்கு விளையாட வரும்படி என்னை அழைத்த அந்த தலைவி "உன்னுடைய இந்த இளமையான வயதில், உன் கணவரின் வியாதிப்படுக்கையில் அடைந்து கிடப்பது நல்லதல்ல, சற்று விளையாடி வருவோம்" என எனக்கு உதவி செய்யும் நல்ல எண்ணத்தோடு கூப்பிட்டார்கள். நான் மீண்டும், என் பரிசுத்த நிலையை காக்க வேண்டிய அவசியத்தை கூறி மறுத்தேன். அதற்கு அவர்கள் "விளையாடி மகிழும் உன்னுடைய உணர்வுகளுக்கு நீ மதிப்பு கொடுப்பதே நல்லது" என கூறினார்கள். நானோ இச்சமயம் முற்றிலுமாய் மறுத்து "ஒரு கிறிஸ்தவ பெண்மணிக்கு **இந்த உலக மகிழ்ச்சி தகாது**" என மீண்டும் கூறினேன். இப்போது நான் கூறியது, அவர்களின் உள்ளத்தை தொட்டு 'அதிக வயது கொண்ட நானே, பொழுதுபோக்கை நாடி வரும்போது..... இத்தனை இளமையான உன்னிடம் காணும் தெய்வ பக்தியைக் கண்டு நான் ஆசீர்வதிக்கப்படுகிறேன்' என கூறி, அன்றைய நாள் முதற்கொண்டு 'பொழுதுபோக்கு அரங்கிற்கு' செல்வதை நிறுத்தி விட்டார்கள்!

இந்த கன்னியாஸ்திரீ தலைவியோடு, இன்னொரு பக்தியுள்ள பெண்மணியும் சேர்ந்து என்னை காண வந்தார்கள். தேவனைப்பற்றி பிரசங்கிக்கப்பட்ட அநேக புத்தகங்களை இந்த பெண்மணி படித்திருக்கிறார்கள். ஆகவே, **தேவனைப் பற்றிய புத்தக அறிவைக்** கொண்டு என்னிடம் நிறைய பேசினார்கள். நானோ என் ஆத்துமத்தின் உள்ளான அமைதியில் உறைந்திருந்தபடியால் 'தேவனைப்பற்றி' அவர்கள் கூறிய யாதொன்றும் என்னை சலனப்படுத்தவில்லை. அவர்கள் பேசிச்சென்ற அடுத்த நாள், மீண்டும் என்னை காண வந்தார்கள். "நான் உங்களிடம் 'தேவனைப்பற்றி' நிறைய பேசிச் சென்ற போது, நீங்களோ **ஒரு ஆழமான அமைதியில்** இருப்பதைக் கண்டேன். அந்த தெய்வீக அமைதி என் உள்ளத்தை ஊடுருவி மகிழச் செய்தது! நான் இப்போது, வெளியில் தேவனைப் பற்றி அறியும் அறிவை காண முற்றுப்புள்ளி வைத்ததாக உணர்கிறேன்" என கூறினார்கள்.

*தன்னுடைய ஆவியில் விடுதலையைப் பெற்றுவந்த, அந்த பெண்ணிடம், நான் என் மனம் திறந்து, ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டோம். தேவன் அவர்களுடைய வாஞ்சையை ஏற்றுக் கொண்டு, தன் அளவில்லாத கிருபையை அவள் ஆத்துமாவிலும் வைத்ததை நான் உணர்ந்தேன்.*

**அவர்கள் என்னை சந்திக்கும் போதெல்லாம், வேறு எதைக் குறித்தும் பேசாமல், தேவனையும் அவர் மீது கொண்ட சிநேகத்தையுமே பேசி மகிழ்ந்தார்கள்!**

*அவர்கள் அதிகமாய் நேசித்த அவர்களின் கணவனைக் குறித்தும் என்னிடம் கூறினார்கள். ஆனால் அவ்வளவு அன்புகூர்ந்த அவளுடைய கணவன், திடீரென்று இறந்துவிட்டார். தேவனுடைய காரியத்தை நான் அறிந்திருந்தபடியால்* **'தனக்குப் பிரியமானவர்களை தனக்கு முழுவதும் வைத்து கொள்ளும்படியே'** *தேவன் அவள் கணவனை எடுத்துக் கொண்டார் என்ற உண்மையை அவர்களோடு அளவளாவி பேசினேன். தேவனும், பல்வேறு சிலுவைகளை அவளுக்கு அனுமதித்து,* **தன்னுடைய ஐக்கியத்தை** *தந்தருளினார்! அதோடு சேர்த்து ஏராளமான கிருபைகளையும் அவள் இருதயத்தில் ஊற்றினார்! அந்த பெண்மணி "எனக்கு அவரின்றி வேறு கதியில்லை" என்ற மாறாத உச்சநிலைக்கு வெகு சீக்கிரமே கடந்து வந்து விட்டார்கள்!*

*அவர்களுடைய கணவன் மரித்தப் பிறகு, அவர்கள் வைத்திருந்த ஏராளமான சொத்துக்களும் பறி போனது! எங்கள் வீட்டிலிருந்து நான்கு வீதி தாண்டி ஒரு சிறிய எஸ்டேட்டில் வாழ்ந்து வந்தார்கள். என் கணவரின் அனுமதியை அவர்கள் பெற்றபடியால், சுமார் ஒரு வாரம் அவர்கள் வீட்டிற்குச் சென்று வந்தேன். அவர்களுடைய இருதயத்திற்கு தேவையானது என்னவோ, அதை தேவன் என் மூலமாய் எடுத்து கொடுத்து* **'மிகுந்த ஆறுதலை'** *அவர்கள் கண்டடையும்படி செய்தார்.*

*அவர்கள் பக்தியுள்ள ஒரு பெண்ணாய் வளர்ந்தப்படியால் ஏராளமான வேத வாக்கியங்களை அறிந்திருந்தார்கள். ஆகிலும், தேவனோடு கொண்ட உறவின் இரகசியங்களை நான் கூறுவதைக் கேட்டு மிகவும் பரவசம் கொண்டார்கள்.*

**நானும் கூட மிகுந்த ஆச்சரியப்பட்டேன்! அது என்னவெனில், நான் தேவனோடு கொண்ட நெருங்கிய உறவில் பெற்ற கிருபைகள், என் மூலமாய் அந்த சகோதரியின் ஆத்துமாவிற்குள் வெள்ளமென பாய்ந்து செல்வதைக் கண்டேன்.**

*இவ்வாறு, தேவனுடைய உறவுக்கு ஏதுவாக, அவரது கிருபையின்*

*புகழ்ச்சிக்கு நான் பணி செய்வது, தேவனுடைய உள்ளத்திற்கு பிரியமாய் இருந்ததைக் கண்டு மனநிறைவு கொண்டேன்!*

*– மேடம் குயான்*

---

## இன்று, ஆர்த்தெழும் கிறிஸ்தவன் குறைந்துவிட்டனரோ?

**அ***ன்று அகிரிப்பா இராஜாவின் முன் நின்று, இயேசுவின் சுவிசேஷத்தை தைரியமாய் சாட்சி கொடுத்த பவுல், 'தன்னை கொன்று விடுவோரின் பாதம்' மிக அருகில் வந்துவிட்டது என அறிந்தே பேசினார். பாவத்திலிருந்து மனந்திரும்பச் செய்யும் பவுலின் கர்ஜனையை கேட்ட அகிரிப்பா "நான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சம் குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என நிலை குலைந்து பேசினான். ஆனால், அங்கு விருந்தாளியாய் வந்த அதிபதி பெஸ்துவோ, தன் தகுதிக்கேற்றபடி பேசாமல் "பவுலே, நீ பிதற்றுகிறாய். அதிக கல்வி உனக்கு பைத்தியம் உண்டாக்குகிறது" என்று பகடி செய்து கூறினார். ஒரு அதிபதியைக் காட்டிலும், தேவ நற்குணசாலியான பவுல், பெஸ்துவை திரும்பிப் பார்த்து "***கனம் பொருந்திய பெஸ்துவே,*** நான் பைத்தியக்காரன் அல்ல!" என கெம்பீர தொனியில் பதில் கூறினார்.*

*ஆனால் இன்றோ 'நித்திய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறோம்' என கூறும் யாரையாவது இன்றைய உலகம் "பைத்தியக்காரர்கள்" என கூறி இருக்கிறார்களா? ஏன் அவ்வாறு கூறவில்லை? சுவிசேஷத்தை பிரசங்கித்து கெம்பீரிக்க வேண்டிய இவர்கள், காணிக்கை பெட்டியை கொட்டி எண்ணத் தொடங்குவதும், தனது பெயர் பிரஸ்தாபத்திற்கு ஏற்பட்ட அவதூறை காத்துக் கொள்ள முயற்சிப்பதும், காணிக்கை தரும் ஜனங்களின் கூட்டம் குறையாமல் இருப்பதற்கும், சுற்றிச் சுற்றி வருகிறபடியால்,* **சுவிசேஷ சாரத்திற்கு** *இந்த பிரசங்கிகள் சாரம் இழந்து வெளியே நிற்கிறார்கள்!*

*ஜான் வெஸ்லி 1784 - ம் ஆண்டு துவக்கி வைத்த மெத்தடிஸ்ட் சபையின் தொடர் கன்வென்ஷன் 1958 - ல் இங்கிலாந்தில் கூடிய போது "அன்று தொடங்கிய நம் சுவிசேஷ மெழுகுவர்த்தி இன்று அணைவது போல் இருக்கிறது!" என கண்ணீரோடு அறிக்கை யிட்டார்கள். அன்றிருந்த பக்தர்களின் மனது விசாலமாய் இருந்தது. அவர்களின் இருதயமும் விசாலம்! தரிசனமும் விசாலம்! ஆனால் இன்று, அந்த மெத்தடிஸ்ட் சபையின் புனிதம் எங்கே? அந்த புனிதம், நோயுற்று, மரணத்தின் குழிக்கு அல்லவோ சென்று கொண்டிருக்கிறது! இந்த வீழ்ச்சிக்கு காரணம் என்ன என்பதை, காணமுடியாத அந்த வீழ்ச்சியை*

*எப்படியாவது கண்டுபிடிப்பதற்கு 'இன்றைய நவீன எக்ஸ்ரே கருவி' அவசியமாய் இருப்பதுபோல் தோன்றுகிறது!? கடந்த 13-ஆண்டுகளில் ஞாயிறு பள்ளி கூடிவந்த சிறார்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்திற்கு மேல் குறைந்துவிட்டது! மேலும் கடந்த 12 - வருடங்களில் நம்முடைய ஊழியர்களும் 276 பேராய் குறைந்துவிட்டனர். இந்த வீழ்ச்சிக்கு மெத்தடிஸ்ட் புனித சபை வந்துவிடக்கூடாது என்ற பாரத்தில் 20 வருடங்களுக்கு முன்பே சாங்ஸ்டர் பரிசுத்தவான் கூறும்போது "நம்முடைய மெத்தடிஸ்ட் புனித சபை மறுஜென்மம் அடைவதற்கு வாய்ப்பு உண்டோ?" என வருந்தி குரல் எழுப்பினார்.*

**மேலும் அவர் புலம்பலோடு கூறியது என்னவென்றால் "நம்முடைய எண்ணிக்கை குறைவாய் இருப்பதால் பரவாயில்லை. ஜீவனுக்கு போகிற வழி நெருக்கமானதுதான்! ஆனால் மீதியாய் இருக்கும் ஜனங்கள் சத்தியத்திற்கு அனல் கொண்டவர்களாய் இருக்கிறார்களா? மேடையில் நின்று ஊழியம் செய்திடும் ஊழியர்கள் கூட தங்கள் விசுவாசத்திற்கு தள்ளாடுவது ஏன்?" என ஆதங்கத்தோடு மனம் பொருமினார்.**

*இங்கிலாந்தின் மெத்தடிஸ்ட் சபைக்கு மாத்திரமா இந்த கதி? ஆஸ்திரேலியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் இதுபோன்ற கதிதானே இருக்கிறது? தென் ஆப்பிரிக்கா சபைகளிலும் வீழ்ச்சியின் மனம் வீசத் தொடங்கிவிட்டதே! சபைகள்தோறும், பக்தர்கள் நிரம்பி வழியும் அமெரிக்க தேச சபைகளின் இன்றைய நிலை என்ன? அங்கு கூடிய அநேகர் யூதா மதத்திற்கும், கத்தோலிக்கத்திற்கும், யெகோவா சாட்சிகளுக்கும் வழி விலகிச் சென்று கொண்டிருக்கிறார்களே? இன்று சிறைச்சாலைகளில்* **கிறிஸ்தவ குற்றவாளிகள்** *நிரம்பி வழிகிறார்கள்!* **விவாகரத்து பட்டியலையும்** *இந்த கிறிஸ்தவர்களே முதல் பங்காய் நிரப்பி வருகிறார்கள்!*

*இன்றைய காலத்தை என்னவென்று ஒப்பிடுவது? "எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயம் செய்ய வேண்டுமென தேவனை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர் களாகிய, தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடியபொறுமை உள்ளவராய் இருந்து, அவர்களுக்கு நியாயம் செய்யாமல் இருப்பாரோ?" என ஒரு சிறு கூட்ட உத்தம கிறிஸ்தவர்களின் அந்தரங்க கூக்குரலின் ஜெபம் தேவனை எட்டிவிட்ட காலம் இது! தம் ஜனத்தின் மீது பொழிந்த கிருபையை விலக்கி விட்டு, தன் பழிவாங்கும் நியாய செயலை தேவன் துவக்கி விடும் காலம் மிக சமீபித்துவிட்டது! என அறிந்து, நாம் விழிப்புடன் ஜீவிப்பது நலம்!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

## வாழ்வின் சோகத்தின் முடிவில்..... பூரண அழகுண்டு!

**தே**வனையும், தேவனுடைய சமூகத்தையும் வெகு குறைவான ஜனங்களே அறிந்திருக்கிறார்கள். அதுஏனென்றால் **'கண்டு விசுவாசிக்கும்'** நம்முடைய மானிட சுபாவமே ஆகும். தேவனுடைய சமூகத்தை ருசிப்பார்க்கும் ஒரு குறைவான கூட்டத்தார், தேவனுடைய பிரசன்னத்தை கண்கொண்டு காணாமலே, அதை அனுபவிக்கிறார்கள்! என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். கண்களில் சொட்டு மருந்து போடுவதை நான் பார்த்திருக்கிறேன். அந்த சொட்டு மருந்தை, தன் கண்ணில் விடும் நோயாளி காண முடிவதில்லை. ஆனால், ஒரு சில நாட்களில் அவன் கண்ணில் சுகம் பளிச்சிடுகிறது! இவ்வாறாகவே, தங்கள் கர்த்தாவின் பிரசன்னத்தை உணரும் பக்தர்களின் 'உள்ளான கண்கள் திறக்கப்பட்டு' தங்கள் ஆவிக்குரிய கண்களால் தேவ பிரசன்னத்தை கண்டு மகிழ்கிறார்கள்.

**தேவ பிரசன்னத்தை உணரும் பாக்கியம் அநேக கிறிஸ்தவர்கள் பெறாதிருப்பதற்கு ஒரே காரணம் 'கண்டு விசுவாசிக்கும்' அவர்களின் அடிமை சங்கிலியே ஆகும். தேவனையும் தேவனுக்குரிய யாதொன்றையும், 'அந்த அடிமை சங்கிலி' உங்களை கட்டி இருக்கும் வரை, உங்களால் தெய்வ பிரசன்னத்தின் மேன்மையை எக்காலத்தும் ருசி பார்த்திட இயலாது!**

இதற்கு ஒரே வழி, ஒருவன் தன் எஜமானிடம் திரும்பி "ஓ கர்த்தாவே, உம்மை காண ஏங்கும் என் அந்தரங்க கண்களை திறந்து விடும்!" என ஜெபித்து, அவரை காண தவிக்கும் குருடான கண்கள் 'இனிமுதல் அவரை காணும்' என **சந்தேகமில்லாமல் விசுவாசிப்பதே** ஆகும்! எவ்வாறு ஒருவன் தன் நாவிலுள்ள சர்க்கரையின் இனிப்பைக் காண இயலாதோ, தன் எஜமான் தந்தருளிய அந்தரங்கத்தில் ருசிக்கும் சமாதானத்தையும் 'காண' இயலாது. பரத்தின் மெய்யான ஆசீர்வாதங்கள், நம் ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டது என்பதை அறியுங்கள். ஆவிக்குரிய கண்களோ, ஆவிக்குரியவைகளை நிதானித்து அறிந்துவிடும்!

தேவன் சிருஷ்டித்த இயற்கையின் பின்னணியில், அதை சிருஷ்டித்த சொந்தக்காரர் இருப்பதை, **'உங்கள் மன கண்கள் பிரகாசித்து விட்டால்'** அதை கண்டு கொள்ள முடியும்! ஆனால் மானிடர்களோ தெய்வ பயத்தையும், பக்தியையும் அசட்டை செய்கிற படியால், தேவனை கண்டு மகிழும் வழியை விட்டு, தடுமாறிச் செல்கிறார்கள். புத்தக படிப்பின் மூலமாய், ஒருவன் தேவனை கண்டு கொள்ள

இயலாது. புத்தகத்தை படித்து ஆராயும் அறிஞர்களில் பலர் கேட்கும் கேள்வி எல்லாம் "சர்வ வல்ல சிருஷ்டிகர் இருப்பார் என்றால், இந்த உலகத்தில் ஏன் சூறாவளிகள்? நிலநடுக்கங்கள்? சரீர பெலவீனங்கள்? மரணங்கள்?" என கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இன்னும் கட்டி முடிக்காத ஒரு கட்டிடத்தை அல்லது பாதி வர்ணம் தீட்டிய ஓர் ஓவியத்தை நீங்கள் குறைகூறி பேசிகொண்டே இருந்தால் என்ன பிரயோஜனம்? ஒருவேளை, உங்கள் அவிசுவாச கண்களுக்கு முன்பு முழுவதும் வர்ணம் தீட்டிய ஒரு சித்திரத்தைக் கொண்டு வந்து நிறுத்தி, அதை உங்கள் கண்கள் கண்டு விட்டால் 'ஆ இத்தனை அழகு ஓவியத்தை குறை சொல்லி விட்டேனே' என சஞ்சலம் அடைவீர்கள் அல்லவா?

**அதுபோலவே.... நடந்துவிட்ட சம்பவங்கள், துயரமடையச் செய்யும் நிகழ்ச்சிகள் ஆகிய யாதொன்றையும், நீங்கள் இப்போது காண்பதைப் போலவே தேவன் வைத்திருக்கமாட்டார்! ஒரு நாளில் தன் கையின் கிரியையை பூரணப்படுத்துவார்!**

'அதுவரை' தேவனுடைய கண்களோடு இசைந்து பார்த்துக் கொண்டே, பார்த்து கொண்டே முன்னேறிச் செல்லுங்கள்! பின்பு, மாசு பிழையற்ற ஒரு பூரண உலகை, பூரண அழகுடன் நீங்கள் காணும் போது, உங்கள் சிருஷ்டி கர்த்தாவுக்கு முன்பாக நீங்கள் தாழ பணிந்து "இது மிகவும் நல்லது!" என்று நன்றி உள்ளத்தோடு கூறுவீர்கள்.

– சாது சுந்தர்சிங்

---

## மிஷன் வேலை போனது! கர்த்தரோ உடனிருந்தார்!!

**ஒ**ரு நாள், பகல் பன்னிரண்டு மணி இருக்கும்! என் வாலிபத்தில், ஆசிரியராய் பணியாற்றிய மிஷன் ஸ்கூல் வகுப்பிலிருந்த பையன்களுக்கு, எழுத்துவேலை கொடுத்தேன். அவர்கள் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். நான் மேஜையின் பக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அந்த அமர்ந்த வேளையில், என் உள்ளத்தில் ஆண்டவர் பேசும் சத்தம் கேட்டது:

**'நான் உன்னிடத்தில் அன்புகூர்ந்து, உனக்காக என் உயிரைக் கொடுத்தேன். நீயோ என்னைத் தேடவுமில்லை, என்னை அறியவு மில்லை, என் பேரில் உனக்கு அன்பும் இல்லை' என்று பேசினார்.**

இது நானே நினைத்துக் கொண்ட நினைவல்ல. ஒருவன் தன்னை ராஜாவென்று நினைத்துக் கொள்வதால் ராஜாவாகமாட்டான். நானே நினைத்துகொள்வதால் என் ஜீவியத்தில் இவ்வளவு பெரிய மாறுதல் உண்டாகமாட்டாது. ஒரு வல்லமையான பிரசங்கி என் முகத்தைப்

*பார்த்துப் பேசியிருந்தாலும் இவ்வளவு உணர்ச்சி உண்டாயிருக்க மாட்டாது. கர்த்தரே பேசினார்! அதைச் சகிக்க முடியாமல் நான் எழுந்து, பக்கத்து அறைக்குள் பிரவேசித்து, அங்கே முகங்குப்புற விழுந்து அழுது: "ஆண்டவரே, நீர் சொன்னது உண்மைதான் ஐயா. இத்தனை வருஷங்களாக நான் கிறிஸ்தவன் என்றிருந்தும் உம்மை நான் தேடவுமில்லை, உம்மை அறியவுமில்லை, உமது பேரில் எனக்கு அன்பும் இல்லை ஐயா!" என்று அறிக்கையிட்டதோடு, "ஆண்டவரே, ஒன்று சொல்லுகிறேன்:* **'இந்நிமிஷ முதல் நான் உமக்கே சொந்தம்'** *என்பதை எழுதிக்கொள்ளும்" என்று சொல்லி, எழுந்து கண்ணீரைத் துடைத்து வகுப்புக்குத் திரும்பிவந்து உட்கார்ந்தேன்.*

*என்னில் உண்டான மாறுதலை எங்கள் ஊர் நாசரேத்து மக்கள் எல்லாரும் அறிந்தார்கள். பள்ளிகூடங்களிலிருந்து மாணாக்கரும், மாணாக்கிகளும் என் வீட்டுக்கு வந்து கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் போனார்கள். சபையாரும் கூட்டம் கூட்டமாக வந்து, என் சாட்சியைக் கேட்டு, கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புவித்துப் போனார்கள். நோயாளிகளும் வந்து குணமானார்கள்!*

*இதனால் ஆத்திரமடைந்த குருமார், தலைமை மிஷனெரியிடம் போய்: 'பரமானந்தத்தை உடனே ஆசிரியர் வேலையிலிருந்து நீக்கா விட்டால் சபை பாழாகும்' என்றார்கள். கனம் மார்க்காஷீஸ் ஐயரிட மிருந்து 1898-ல் ஒரு கடிதம் எனக்கு வந்தது. அதிலே:* **இந்த மிஷனில் உனக்கு இதுமுதல் வேலை இல்லை** *என்று கண்டிருந்தது. எனக்குத் திடீரென வேலைபோனதைக் கண்டு, என் தகப்பனார் கவலை யுற்றார்கள். என் தாயார் அழுதார்கள். என் சகோதரர் சகோதரிகள் விசனத்தோடிருந்தார்கள்.* **நானோ கர்த்தருக்குள் சந்தோஷமாயிருந்தேன்.**

*மறுநாள், என் தகப்பனாருக்குச் சிநேகிதரான ஒரு குருவிடமிருந்து ஒரு ஆள் வீட்டுக்கு வந்து: உங்கள் மகன் உடனே மிஷனெரியிடம் போய், "நான் கிறிஸ்துவைப் பற்றி பேசாமல், அமைதலாயிருக்கிறேன் என்று சொல்லட்டும்"..... உடனே வேலையில் வைத்துக் கொள்வாரென்று சொல்லும்படி, என்னை அனுப்பினார் என்றார். இந்த யோசனை, என் தகப்பனாருக்குப் பிரியமாயிருந்தது. சம்பளம் 25 ரூபாய் போய் விட்டதே என்ற கவலையால் அவர்கள் என்னைப் பார்த்து: "மகனே, மிஷனெரியிடம் போய் அப்படியே சொல்லு" என்றார்கள். அதற்கு மாறுத்தரமாக "நான் ஆண்டவரை நம்பி வாழ்ந்து, வெறும் மண்ணைத் தின்றாகிலும் பிழைப்பேனேயன்றி, வயிறு பிழைக்கும்படி என் ஆண்டவரை மறுதலிக்கமாட்டேன்!" என்று கூறினேன்.*

**நாசரேத் ஒரு கிறிஸ்தவக் கிராமமாயிருந்தும், நான் கலங்கி நின்ற இந்த சமயத்தில்: "பரமானந்தம், சோர்ந்துபோகாமல் தைரியமாயிரு!" என்று எனக்குச் சொல்வாரில்லை!**

அநேகமாய் எல்லோருமே ஆலய பக்தர்களும், ஆராதனைக் கிறிஸ்தவர்களுமாயிருந்தார்கள், ஜீவியத்தில் இரட்சிப்பின் மாறுதலை தேடினவர்கள் இல்லை! அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிப்பின் மாறுதலை அறியாதிருந்த காலத்தில், புறம்பான மார்க்க ஆசாரங்களில் பக்திவைராக்கியமாய், கிறிஸ்துவின் அடியார்களைப் பாடுபடுத்தினர்.

ஆகிலும், என்னை ஒதுக்கி நின்றவர்களில் அநேகர், கிறிஸ்துவைச் சொந்தமாக்கி, ஜீவியத்தில் மாறுதலடைந்தபோது, என்னோடு சேர்ந்து கிறிஸ்துவுக்காக உழைத்தார்கள். நான் நாசரேத்தில் செய்த ஊழியம் தவிர, சுற்றிலுமுள்ள கிராமங்களுக்குப் போய் பிரசங்கித்து வந்தேன். மெஞ்ஞானபுரத்திற்குப் போய், அங்குள்ள மகா பெரிய ஆலயத்தில் பிரசங்கித்தேன். 'நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா?' என்று சபையைச் சேர்ந்த ஒருவர் கேட்க, மற்றவர்: 'வந்து பார்' என்று சொல்லி அவரை அழைத்துக்கொண்டு வந்தார்! ஜிம்னாஸ்டிக் உபாத்தியாயராயிருந்த என்னை அறிந்தவர்கள் எல்லாரும் நான் பேசினதைக் கேட்டபோது, என்னில் உண்டான மாறுதலைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்! பாளையங்கோட்டை வேதசாஸ்திரப் பாட சாலையில் பேசும்படி என்னை அழைத்தார்கள். நான் அங்கே போய் **"ஆவியானவரைப் பற்றி" பேசினேன்.** பிரசங்கம் முடிந்தபின், எல்லாரும் என்னைச் சூழ்ந்து கொண்டு, என்னைத் தழுவி, இந்த அறிவு உங்களுக்கு எப்படி வந்ததென்று கேட்டார்கள். "ஆண்டவரே தமது வசனத்தின் மூலமாய் எனக்குப்போதிக்கிறார். நான் அவரிடமே கற்றுக் கொள்கிறேன்" என்றேன்! இவ்வாறாகவே, என் ஆரம்ப முழுநேர ஊழியத்தில், கர்த்தர் என்னோடிருந்து, ஊக்குவித்து நடத்தினார்!

– பரமானந்தம் ஐயர்

---

## வேத வசனமும் ஜெபமும் இல்லாமல், ஜெயம் இல்லை!

**பி**சாசை எதிர்த்து நின்ற யுத்தத்தில், அவன் தோற்று ஓடிப் போய்விட்டதைக் கண்ட கிறிஸ்தியான் மகிழ்ச்சி அடைந்தான். ஆகிலும் அவன் உடம்பில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த தக்க சமயத்தில், பரத்திலிருந்து ஒரு கரம் தோன்றி **சில ஜீவ இலைகளை** கிறிஸ்தியான் கரத்தில் கொடுத்தது. அதைப்பெற்ற அவன் பூரண சுகம் அடைந்தான்! அதுமாத்திரமல்லாமல், தன் இருதயத்தில் மிகப்பெரிய **ஆறுதலை அடைந்தவனாய்,** தேவனோடு ஒப்புரவாக வேண்டிய

*பகுதிகளை அறிக்கை செய்து திட மனதோடு எழுந்து நின்றான்! பின்பு தன் சர்வாயுதவர்க்கத்தோடு கெம்பீரமாய் புறப்பட்டுச் சென்றான். கிறிஸ்தியான் சந்தித்த முதல் போராட்டத்தில் அடைந்த வெற்றி, இனி அடுத்தடுத்து வரப்போகின்ற போராட்டங்களை ஜெயிப்பதற்குரிய பெலனை அவனுக்குத் தந்தது!*

*அச்சமயத்தில், இரண்டு பேர் பயத்துடன் 'பின்னோக்கி' ஓடிவந்தார்கள். நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திலும், பின்மாற்ற மடையும் கிறிஸ்தவர்களை நாம் அவ்வப்போது சந்திக்க நேரிடும். இவர்கள் கிறிஸ்தியானைப் பார்த்து "எங்களைப் போல் திரும்பிவிடு! திரும்பி விடு! அநேக ஆபத்துகள் உனக்கு முன்னால் இருக்கிறது!" என பீதியுடன் கிறிஸ்தியானை அழைத்தார்கள். ஆனால் கிறிஸ்தியானோ, ஏற்கெனவே சங்கிலியால் கட்டப்பட்ட சிங்கத்தை சந்தித்திருக்கிறான், பிசாசை எதிர்த்து யுத்தத்தில் சந்தித்திருக்கிறான்! .....ஆகவே, 'அவர்களின் பயத்தின் கூப்பிடுதல்' கிறிஸ்தியானை அசைத்திட முடியவில்லை.*

**பல வருடங்களாய் இருக்கும் நமது கிறிஸ்தவ நல்ல நண்பர்கள் கூட, திடீரென பின்மாற்றமடைய முடியும். சபைக்கு திடீரென நின்றுவிட்ட இவர்கள், பின்பு அவர்களை காணமுடியாதபடி நிரந்தரமாய் பின்மாறி போகிறார்கள். நாமோ, இதனிமித்தம் அசைக்கப்படவே கூடாது!**

*முன்னேறிச் சென்ற கிறிஸ்தியான், மிகவும் குறுகலான ஒரு பாதை வழியாய் கடந்துச் சென்றான். அந்த பாதையின் ஒரு பக்கம், பல ஆயிரம் ஆழம் கொண்ட நெருப்பின் தனல் வீசிக் கொண்டிருந்தது. பாதையின் அடுத்த பக்கம் உளையான சேறு, அமிழ்த்திவிட காத்திருந்தது. அந்த பள்ளத்தில் இருந்த நெருப்பு சீறி எழுந்து, அச்சுறுத்தும் பல குரலும் கேட்டது. அதன்மேல், அசுத்த ஆவிகள் செட்டை விரித்து பறந்தன. இந்த இக்கட்டு நேரத்தில், தன்னிடம் உள்ள பட்டயம் போதுமான வலிமை அற்றதைப்போல் கிறிஸ்தியான் உணர்ந்தான்! ஆகவே, முழங்கால்படியிட்டு பரத்தின் உதவியை நாடி ஜெபிக்கத் தொடங்கினான். உண்மைதான், தேவனுடைய வார்த்தை மாத்திரம் போதுமானதாய் இராமல், ஜெபத்தின் உதவியை நாடி 'ஆண்டவரே உமது கிருபையைத் தாரும்' என ஜெபிக்கத் தொடங்கினான்.* "**சகலவிதமான வேண்டுதலும், ஜெபமும்" வேத வசனத்தைப் போலவே, பிசாசை எதிர்த்து ஜெயித்திட வலிமையான ஆயுதம்** *என எபேசியர்.6:18 கூறுகிறது. கிறிஸ்தியான் ஜெபித்து முடித்தவுடன், புதுபெலன் கொண்டு எழுந்து நின்றான். பின்பு* "**கர்த்தராகிய என் ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு முன்னேறி நடப்பேன்!**" *என்ற*

*சங்கீதம்.71:16 - ம் வசனத்தை அறிக்கைச் செய்து, தைரியமுடன் நடந்தான். இவ்வாறு கர்த்தருடைய வார்த்தையை அறிக்கை செய்வதும், அதன் மூலம் நாம் தைரியத்தையும், உதவியையும் பெறுவது, ஓர் ஆச்சரியமான செயலாகும்.*

*– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)*

---

## நிலைத்திருக்கும் அன்பின் இருதயம் வேண்டும்!

*"**தெ**ய்வ அன்பின் வல்லமையே" நாம் ஒரு சேனையைப் போன்ற ஐக்கியத்தில் இசைந்திருக்கவும், நம் செய்கையாவிலும் நம்மை சோர்ந்து போகாதிருக்கவும் வல்லமைக்கொண்டது! எனவேதான்* **அன்பிற்கு ஓயாத எதிர்ப்பு** *அலைமோதுகிறது! நாம் அன்பை இழந்து, சத்தமிடுகிற வெண்கலம்போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் மாறுவதற்கே இந்த எதிர்ப்பு!*

**இதினாலேதான், அன்பின் ஜீவியஞ்செய்ய விரும்புகிறவர்களாகிய நாம், தொடர்ந்து நம்மைப் பரிசோதித்துச் சுத்திகரிக்கும் தேவஆவியானவரைத் தேடும்படி நெருக்கி ஏவப்படுகிறோம்!**

*ஆவியானவரின் இந்த ஏவுதல், அடிக்கடி* **முதலில் நமது சொந்த உள்ளத்தில்** *ஆரம்பிக்கிறது. அதற்குப்பிறகு,* **எல்லோரோடும்** *நாம் கொண்டிருக்கும் அன்பைக்குறித்து நம்மைப் பரிசோதிக்க வேண்டுமென்ற ஆவல் எழும்புகிறது. இந்த தாகமோ "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணுகிறதில்லை" என்று 'தீராத தாகமாகவே' நம்மை அன்பின் பாதையில் தொடர்ந்து ஓடச் செய்கிறது! இந்த தொடர் ஓட்டத்தை, நாம் அவருடைய வல்லமையினால் ஓடி முன்னேறிச்செல்வோமாக!*

*இவ்வாறு, நம்மிடமுள்ள அன்பை சத்துரு எதிர்ப்பதற்கு இன்னொரு காரணமுண்டு, அதுஎன்னவென்றால்: "நீங்கள் அன்பில் நிறைந்திருக்கும்போது, பிறரிடம் மாறாத அன்புடையவர்களாய் இருப்பீர்கள். ஆனால், உங்கள் உள்ளத்தில் "சிறிதளவு அன்பற்ற தன்மையை" சத்துரு போட்டுவிட்டால், உங்கள் சம்பந்தப் பட்டவர்களின் வாழ்விலும் 'அதே அன்பற்ற தன்மை' பரவிவிடும்! இந்த யுக்தியைத்தான் சத்துரு பயன்படுத்துகிறான்! சத்துருவின் தந்திரம் அறிந்து, நம்முடைய இருதயத்தில் எப்போதும் அன்பு நிறைந்து வழிந்தோட, பரிசுத்தாவியின் அருள்மாரியை இடைவிடாது தேடி, அன்பில் வேரூன்றி வளர்வோமாக!*

*– ஏமி கார்மைக்கேல்*

## எது மெய்யான சந்தோஷம்?

*இன்றைய **21**-ஆம் நூற்றாண்டின் மனுக்குலம் கொண்டிருக்கும் கொள்கையாதெனில் "சந்தோஷமாயிருப்பதற்கே நாங்கள் பிறந்திருக்கிறோம்!" என்ற* **ஒரு-வரி கொள்கை** *மாத்திரமேயாகும். இவர்களில் ஒருவராவது "வீழ்ச்சியுற்ற ஒரு மனிதன் சந்தோஷத்தைக் கேட்பதற்கு என்ன தார்மீக உரிமையுண்டு?" என தட்டிகேட்பதற்கு தைரியம் அற்றவனாக இருக்கிறான்.*

**உணர்வுள்ள ஒரு கிறிஸ்தவன் புதியஏற்பாட்டை கருத்தூன்றி தியானத்துடன் வாசித்தாலே, சத்திய வேதத்தின் வலியுறுத்துதல் மகிழ்ச்சியை எல்லையாய் வைக்காமல், பரிசுத்தத்தை எல்லையாய் வைத்திருப்பதை மிக எளிதில் கண்டு கொள்ளுவான்!**

*ஜனங்களின் 'இருதயத்தை குறித்த நிலையில்' தேவன் அதிக அக்கறை கொண்டிருக்கிறாரேயல்லாமல், அவர்களுடைய உணர்வுகள் எந்த நிலையிலிருக்கிறது? என்பது அவருக்கு அதிக முக்கியமல்ல. கீழ்படிதல் கொண்டவனாய் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவன் மாத்திரமே சந்தேகத்திற்கு இடமில்லாமல் பூரண மகிழ்ச்சி கொண்டவனாயிருப்பான். ஆகிலும், அவனைப் பொறுத்த வரையில், தான் எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறான் என்ற கேள்வியல்ல........ தான் எவ்வளவு பரிசுத்தமாயிருக்கிறான் என்பதே முக்கிய கேள்வியாய் அவனுக்குள் குடிகொண்டிருக்கும்!*

*தான் பரிசுத்தமில்லாது வாழ்ந்து கொண்டு அதேசமயம் ஒருவன் மகிழ்ச்சியை நாடுவது மாபெரும் மதியீனம்!*

*தேவனுடைய சித்தம் இன்னதென்று அறியவும் பின்பு அதை நிறைவேற்றவும் எடுக்கின்ற முயற்சியே சாலச் சிறந்ததாகும்! எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்? என்ற விஷயத்தை கிறிஸ்துவினுடைய தீர்மானத்திற்கு விட்டு விடுவதே ஒப்பற்ற வாழ்க்கையாகும்.*

*இவ்வேளையில் உங்கள் இருதயத்தில், தேவன் ஒரு குறையை உணர்த்தினால், நான் உங்களுக்குச் சொல்லும் ஆலோசனை "நீங்கள் தேவனிடத்திற்குப் போய், ஆண்டவரே! என்ன கிரயம் செலுத்தியாகிலும்,* **நான் பரிசுத்தம் அடைய வேண்டும்** *என்பதே என் தீராத ஆசையாயிருக்கிறது என கேளுங்கள். மேலும், ஆண்டவரே! பரிசுத்தத்தின் சந்தோஷத்தை விட அதிகமாய் வேறு சந்தோஷத்தை நீர் எனக்குத் தர வேண்டாம்!" என்றும் கேளுங்கள். ஆ, இதுவே மெய்யான சந்தோஷம்!*

*– A.W.டோசர்*



# யோவான் அப்போஸ்தலன்,

## மரணத்தை ஜெயித்து முத்திரை பதித்த சீஷன்!

**(AD 95)**

அப்போஸ்தலனாகிய யோவானின் தந்தை செபெதேயு, தாய் சலோமி (மத்.27:56, மாற்கு.15:40 ஒப்பிட்டு காண்க). அவருடைய இளைய சகோதரன் யாக்கோபு. இவர்கள் இருவரையும் "இடிமுழக்கத்தின் மகன்கள்" என்றே இயேசு குறிப்பிட்டார். மெய்யான சுபாவத்தில் இவர்கள் இருவருமே திவ்விய பொறுமை கொண்டவர்கள். ஆனால், 'கர்த்தருடைய வைராக்கியத்திற்குள்' இவர்கள் வந்தபோதெல்லாம் **இடிமுழக்கம் என பரத்தின் வார்த்தைகளை பொழிந்தார்கள்** என்பதற்கு அவர்கள் வேதத்தில் எழுதின நிரூபங்கள் சாட்சி!

அன்று, அவரை கைது செய்த ரோம அதிபதி, ரோமானிய திடலின் நடுவில் யோவான் அப்போஸ்தலனை நிறுத்தி "இயேசுவின் சீஷர்களில், உயிரோடிருக்கும் கடைசி அப்போஸ்தலன்! இன்று சாகப்போகிறான்" என கூறியதும் கூடியிருந்த திரள் ஜனங்கள் கைகொட்டி ஆர்ப்பரித்தார்கள். அச்சமயம் பேரரசின் காதில் ஒரு அதிகாரி குனிந்து "இந்த யோவான், அவர்களின் தெய்வம் இயேசு திரும்ப வரும் வரை **சாக மாட்டான்**" என இந்த கிறிஸ்தவர்கள் கூறிக்கொள்கிறார்கள். அதற்கு அந்த ரோம பேரரசன் "இந்த கிறிஸ்தவர்கள் பிடிவாதம் கொண்டவர்கள் 'அற்புதம்' என மூட நம்பிக்கை கொண்டவர்கள், நான் சொல்கிறேன் ....இன்று இவன் சாவான்" என கொக்கரித்தான். இவனை எப்படி கொல்லலாம்? என ஆலோசித்து கடைசியில் கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் போட்டு, இம்சித்து சாகடிக்கலாம்! என முடிவு செய்தனர்.

கொப்பரையில் எண்ணெய் கொதித்த உடன் யோவான் அப்போஸ்தலன், கொப்பரைக்குள் வீசப்பட்டார். சுற்றியுள்ள ஜனங்கள் பலத்த கரகோஷம் செய்தனர். ஒரு நிமிடத்திற்குள் ரோம பந்தய திடல் நிசப்தமானது. எல்லோரும் எழுந்து நின்று, கண்களை அகல விரித்து "அப்போஸ்தலன் யோவானை, அவன் தெய்வம் இயேசு காப்பாற்றி விட்டார்!" என வியந்து தள தள என கொதிக்கும் எண்ணெயின் நடுவில் யோவான் அப்போஸ்தலன் தன் கைகளை உயர்த்தி முக மலர்ச்சியுடன் ஜெபித்துக் கொண்டிருந்தார். கிறிஸ்தவ விசுவாசத்தை அழிக்க வகை தேடிய அந்த ரோம சக்கரவர்த்திக்கு 'இந்த நிகழ்ச்சி' கிறிஸ்தவ விசுவாசத்தை புகழ்பாட செய்துவிட்டதே என ஆத்திரமடைந்த அவன் "**இவனைத் தூக்கி பத்மு தீவில் தள்ளிவிட்டு வாருங்கள்**" என கட்டளையிட்டான். அங்கே இந்த அப்போஸ்தலன், ஏராளமான பரம தரிசனங்களைக் கண்டார். அந்த பேரரசன் மரித்த உடன், யோவான் அப்போஸ்தலன் விடுவிக்கப்பட்டார். எபேசு பட்டணத்திற்கு திரும்பிய அவர், தான் மூப்பராய் இருந்து நடத்திய அந்த சபையை தொடர்ந்து நடத்தினார். பின்பு பூரண சமாதானத்துடன் தன் 101- வது வயதில் மரித்தார் என அவரைக் குறித்து கூறப்படுகிறது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## ஓ வாலிபனே, கர்த்தரே உன் நித்திய புகலிடம்!

அநேக ஆண்டு காலங்களுக்கு முன்னர் நான் ஜெர்மனி நாட்டில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது புகழ்பெற்றச் சித்திரக்கலைக்கூடங்கள் சிலவற்றைப் பார்வையிட்டேன். அந்நாட்டின் முனிச் என்ற பட்டணத்திலுள்ள ஒரு கலைக்கூடத்தில் நான் கண்டதொரு சித்திரத்தின் காட்சி என் மனதில் ஒரு ஆழமான பரவச உணர்வை உண்டாக்கிவிட்டது. புயற்காற்று ஒன்றின் வரவை முன்னறிவிக்கும் காட்சிதான் அது!

கரிய மழை முகில்கள் ஒன்று திரண்டு உருண்டு எழுந்து அச்சுறுத்துகின்றதும், வரப்போகும் கடும் புயலுக்கு முன்னர் வீசும் காற்றின் வேகத்தில் நிலை குலைந்துபோன மரங்கள் தலைவணங்கி நிற்கின்றதும், ஆடுமாடுகளும் குதிரைகளும் வயல்வெளிகளில் குறுக்கும், நெடுக்குமாகச் சீறிப் பாய்ந்து வரும் புயற்காற்றின் வேகம் கண்டு, பயந்து மிரண்டு விரைந்து ஓடுகின்றதும், ஒரு சிறிய கூட்டம் ஆண்கள், பெண்கள், சிறுபிள்ளைகள் கூனிக் குனிந்த நிலையில் பயத்தால் முகம் வெளுத்தவர்களாய் பார்வை, நடை, செயலாற்றல் ஒவ்வொன்றும் திகிலும், கிலியும் கொண்ட மக்களாகக் கொடும் புயலுக்கு முன்னால் ஒரு மறைவிடத்தைத் தங்களுக்கெனத் தேடிக்கொண்டு ஓடுபவர்களான காட்சியாகச் சித்திரக்காரர் அப்படத்தைத் தீட்டியிருந்தார்.

புயலுக்குமுன் நிகழக்கூடிய காரியங்களின் கண்ணோட்டத்தில் மட்டும் சித்திரக்காரர் அப்படத்தை வரையவில்லை என்று நான் யூகிக்கின்றேன். இன்று மனுமக்கள் ஒவ்வொருவரின் வாழ்வினைச் சரியான விதத்தில் சித்தரிக்கும் ஒரு காட்சியாகவே அப்படம் எனக்குத் தெரிந்தது!

ஓ, வாலிபனே.... உன் கண்முன் காணும் எதுவும் உன்னைக் காக்கும் புகலிடமல்ல! ஒரு கடும் புயலில், அந்த முழு கிராமமும், அலைக்கழிக்கப்பட்டு சார்ந்து கொள்ள எந்த உதவியும் இல்லாது தள்ளாடிய நிலையை உன் கண்முன் நிறுத்துவாயாக! உன் சிருஷ்டி கர்த்தாவே உன் புகலிடம்! அவரையே இன்று அண்டிக்கொள்! (ஏசாயா.32:2).

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.